Fire accident in cracker godown

*296 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether fire broke out in a cracker godown in Walltax Road, Madras, on 28th September 1967;

(*b*) if so, the reasons therefor;

(*c*) the extent of damages caused and the number of casualties; and

(*d*) the steps taken to prevent such occurrences?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: (அ) ஆம்.

(இ) பட்டாசு முதலியவை அடங்கிய பெட்டிகளைக் கிடங்கில் வைப்பதற்காக லாரியிலிருந்து அவற்றை இறக்கிக்கொண்டிருக்கையில் இந்த விபத்து ஏற்பட்டது.

இதனால் ஏற்பட்ட மொத்த விரயம் சுமார் ரூ. 36,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. உயிர்ச் சேதம் எதுவும் இல்லை.

இது போன்ற விபத்துக்களைத் தடுப்பதற்கும் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

(i) லாரி கொட்டகைகளின் உரிமையாளர்களும் கிடங்குச் சொந்தக்காரர்களும், வெடிமருந்துகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகையில் இடைத் தங்கலாகக் கூட தங்கள் கொட்டகைகளில் அவற்றைச் சேகரித்து வைக்கக்கூடாது என்று எச்சரிக்கப்படுவர்.

(ii) வெடிமருந்துகளின் போக்குவரத்திற்காக, வெடிமருந்துகளை அனுப்புகிறவர்களுக்கும், அவற்றைப் பெற்றுக் கொள்பவர்களுக்கும் வழங்கப்படும் போக்குவரத்து உரிமத்தின் நகல் காவல் துறை ஆணையருக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்போதுதான் அவர் அதனை ஓரளவு கண்காணிக்க முடியும்.

(iii) காவல்துறை மேற்பார்வையாளர் அல்லது அதற்கு மேற்பட்ட பதவியிலுள்ளவர்கள் வெடிமருந்து சேகரிப்பு உரிமம் வழங்குகையில், அவை தகுந்தபடி சேகரித்து வைக்கப்படுகின்றனவா என்று சரியானபடி கண்காணிக்க வேண்டும்.

(iv) தீபாவளி காலத்தில் இது குறித்துச் சிறப்பான நாட்டம் செலுத்தப்படவேண்டும்.

THIRU K. VINAYAKAM: Was this incident just an accident or was any sabotage suspected? What does the Chief Minister exactly mean when he says 'vedimarundu'? Is it of an explosive and dangerous kind or is it just like the one which is used for making the Deepavali crackers? மு. ப. 10-30.

THE HON. THIRU C. N. ANNADURAI: I was referring only to crackers. On investigation it was found that there was no sabotage.

DR. H. V. HANDE: This happened in my constituency and I was there on the very day as soon as I got information. Will

the Chief Minister convey to the Fire Service men thanks for the exemplary manner in which they handled the situation and restored normalcy within a matter of few hours ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Fire Fighting Services and also the Police connected with it have acted in an exemplary manner.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இதே வட சென்னையிலே கோடவுன் தெருவில் 1964-ம் வருஷத்திலே அமிலம் வைக்கப்பட்டிருந்த கிடங்கு தீப்பிடித்து 26 பேருக்கு மேல் இறந்து விட்டார்கள். இந்தமாதிரி அமிலங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றை மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் வைக்காமல் வேறு பகுதிகளிலுள்ள கோடவுன்களில் வைக்க வேண்டுமென்று விதிகள் இயற்றப்பட்டு அமலுக்குக் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன முறைப்படி இந்த விதிகளை மாற்ற வேண்டுமா என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்று. இப்போது இருக்கும் இடத்திலே விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க என்ன பாதுகாப்பு முறைகளை வைக்கலாம் என்பது யோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி வெடி மருந்து கிடங்குகளில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதற்குக் காரணம்—விஞ்ஞான அடிப்படையில் ரசாயன மருந்துகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மலிவாகக் கிடைக்கிறது என்ற காரணத்தால் சில நாட்டு மருந்துகளைக் கண்மூடித்தனமாகக் கலந்து தயார் செய்யக்கூடிய காரணத்தால்தான் அடிக்கடி இந்த விபத்துகள் ஏற்படுகின்றன என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இது தீவிரமாகக் கண்காணிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : எனக்கு அந்த விவரம் தெரியாததால்தான், எதனால் இந்த விபத்து ஏற்பட்டது என்று போலீஸ் துறையினர் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. நா. காசிராமன் : இந்தமாதிரி வெடி மருந்துகளால் விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தால் வெடி மருந்துகளை வைக்கக்கூடிய இடங்களிலும், தயார் பண்ணக்கூடிய இடங்களிலும், தொழிற்சாலைகளிலும் பணி புரியும் ஊழியர்கள் எல்லோருக்குமே அந்த வெடி மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை முதலாளியே அவர் செலவில் இன்ஷூரன்ஸ் செய்து கொடுக்கவேண்டுமென்பதற்காக சட்ட திருத்தங்களைக் கொண்டு வர இந்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : விபத்து நடைபெற்றது வெடி மருந்து தயாரிக்கும் இடத்தில் அல்ல. கிடங்குகளில் இறக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் நிலையில்தான் விபத்து ஏற்பட்டிருக்கிறது. இந்த இடத்திலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றன என்றால், தயார் செய்யும் இடத்தில் இன்னும் அதிகமாக ஏற்படும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் ஊகித்துக் கொள்வதில் தவறு இல்லை. அதைப் பற்றித் தொழிற்துறை அமைச்சர் அவர்கள் தகுந்த கவனம் செலுத்துவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]